பக்கங்கள் 24

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | மாசி 18 திங்கட்கிழமை 02.03.2026 | அதிர்வு 214

## ஐக்கிய அரபு இராச்சியத்தில் இலங்கையர்கள் உட்பட 58 பேருக்குக் காயம்!

### மூவர் உயிரிழப்பு

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் போர் பதற்றம் உச்சக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில், ஐக்கிய அரபு இராச்சியம் மீது ஈரான் முன்னெடுத்துள்ள பாரிய வான்வழித் தாக்குதல்களில் 06▶



# ஊடகவியலாளர்கள் மீதான கொடூரங்கள்: விசாரிப்பதற்கு ஜனாதிபதி ஆணைக்குழு!

## வலியுறுத்துகின்றார் ஹக்கீம் எம்.பி.

"யுத்த காலங்களில் ஊடகவியலாளர்கள், ஊடக நிறுவனங்கள் போன்ற தரப்புகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட கொடூரங்கள் குறித்து உண்மைகளைக் கண்டறிவதற்காக ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று நிறுவப்பட வேண்டும்."

- இவ்வாறு கோரிக்கை முன்வைத்திருக்கின்றார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம்.

மறைந்த மூத்த ஊடகவியலாளர் பாரதி இராஜநாயகத்தின் முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வும், 'பாரதி ஒரு மனிதாபிமான ஊடகன்' எனும் நூல் வெளியீட்டு விழாவும் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தில் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ரவூப் ஹக்கீம் எம்.பி. இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

'யுத்த காலத்திலும் பின்னரும் ஊடகவியலாளர்கள் - குறிப்பாகத் தமிழ் ஊடகவியலாளர்கள் - சொல்லொணாக் கொடூரங்களையும், துன்ப துயரங்களையும், அடாவடித்தனங்களையும் எதிர்கொண்டனர். பலர் கொல்லப்பட்டனர். பலர் காணாமலாக்கப்பட்டனர். அவர்கள் எவருக்கும் இதுவரை நீதி கிடைக்கவில்லை. 06▶






மூத்த ஊடகவியலாளர் இராஜநாயகம் பாரதியின் முதலாம் ஆண்டு நினைவு தினம் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று மாலை கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்றது. அப்போது இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஒரு விடயத்தை வெளிப்படுத்தினார்.

நிகழ்வில் பேசிய ஊடகவியலாளர் ஒருவர், தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட்டு இருக்க வேண்டும் என்பதை வற்புறுத்திக் கருத்து வெளியிடுகையில், தமிழ்த் தலைவர்கள் தங்களுடைய சொந்த நலன் கருதி மட்டும் அரசாங்கத்தோடு ஊடாடுகின்றார்களே தவிர, தமிழ் மக்களின் பிரச்சினை விடயத்தில் கரிசனையோடு செயல்படவில்லை என்ற கருத்தை முன் வைத்தார். 06▶





# மூத்த ஊடகவியலாளர் பாரதியின் முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வு

மறைந்த மூத்த ஊடகவியலாளர் பாரதி இராஜநாயகத்தின் முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வும், 'பாரதி ஒரு மனிதாபிமான ஊடகன்' எனும் நூல் வெளியீட்டு விழாவும் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்றது.

தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் லண்டன் – இலங்கை தமிழ் இலக்கிய நிறுவனம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வு, தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் எஸ்.ஸ்ரீகஜன் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வின் முக்கிய அங்கமாக, மறைந்த ஊடகவியலாளரின் பணிகளைத் தொகுத்து உருவாக்கப்பட்ட 'பாரதி ஒரு மனிதாபிமான ஊடகன்' என்ற சிறப்பு மலர் வெளியிடப்பட்டது. இதன் முதல் பிரதியை ஜனாதிபதி சட்டத்தரணி கனக ஈஸ்வரன் பெற்றுக்கொண்டார்.

முன்னதாக, மூத்த ஊடகவியலாளர் அனந்த பாலகிட்னர் வரவேற்புரையை நிகழ்த்தியதுடன், சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி எம்.எஸ். தேவகௌரி தொடக்கவுரையை ஆற்றினார்.

ஊடகத்துறை மற்றும் அரசியல் துறையைச் சார்ந்த பல முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டு பாரதி இராஜநாயகத்தின்

தொடர்ச்சி▼






















# மூத்த ஊடகவியலாளர் பாரதியின் முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வு

தொடர்ச்சி▲

ஊடகப் பயணம் மற்றும் சமூகப் பங்களிப்பு குறித்துச் சிறப்புரையாற்றினர்.


ஊடகப் பிரமுகர்களான எஸ். செந்தில்வேலவர் (பிரதம ஆசிரியர் – தினகரன்), என். வித்தியாதரன் (பிரதம ஆசிரியர் – முரசு), எம்.செந்தில்நாதன் (பிரதம நிறைவேற்று அதிகாரி – எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ்), நாடாளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன் (தலைவர் – தமிழ் முற்போக்குக் கூட்டணி), ரவூப் ஹக்கீம் (தலைவர் – ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்), செல்வம் அடைக்கலநாதன் (தலைவர் – ரெலோ), முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன் (பொதுச்செயலாளர் – இலங்கைத் தமிழரசுக் கட்சி), சுரேஷ் பிரேமச்சந்திரன் (தலைவர் – ஈ.பி.ஆர்.எல்.எப்.) ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர்.

மூத்த ஊடகவியலாளர் அ.நிக்ஸன் இந்நிகழ்வை தொகுத்து வழங்கினார்.

பெருமளவிலான ஊடகவியலாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள் மற்றும் பாரதி இராஜநாயகத்தின் குடும்பத்தினர் எனப் பலரும் கலந்துகொண்டு அன்னாரின் உருவப் படத்துக்கு மலரஞ்சலி செலுத்தியமை குறிப்பிடத்தக்கது.












### உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்:

# மைத்திரி, ரணில் உட்பட 12 பேருக்கு எதிராக உடனடி விசேட விசாரணை!

## சட்டமா அதிபர் திணைக்களம் அதிரடி உத்தரவு

உயிர்த்த ஞாயிறு தினப் பயங்கரவாதத் தாக்குதல் குறித்து விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் பெயரிடப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் பாதுகாப்புத் துறை உயர் அதிகாரிகளுக்கு எதிராக உடனடி விசாரணைகளை ஆரம்பிக்குமாறு சட்டமா அதிபர் திணைக்களம் குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்குப் பணிப்புரை விடுத்துள்ளது.

மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் மற்றும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் மாதவ தென்னக்கோன் ஆகியோரின் கையொப்பத்துடன் இதற்கான விசேட கடிதம் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் பணிப்பாளர் ஷானி அபேசேகரவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவின் பரிந்துரைகளை ஆழமாக ஆய்வு செய்து, அதன் அடிப்படையில் சட்டப்படியான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அதில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

விசாரணைப் வளையத்துக்குள் வரும் முக்கியஸ்தர்கள்

ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் கடமை தவறியதாகக் குற்றம் சாட்டப்பட்டு, தற்போது விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளவர்களில் முக்கியமானவர்கள்:

அரசியல் தலைவர்கள்: முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

பாதுகாப்பு உயர் அதிகாரிகள்: முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜெயசுந்தர.

பொலிஸ் அதிகாரிகள்: சிசிர மெண்டிஸ், நிலந்த ஜெயவர்தன, நந்தன முனசிங்க, லலித் பத்திநாயக்க, தேசபந்து தென்னக்கோன், வசந்த விக்கிரமசிங்க, பி.எல். பெரேரா மற்றும் ஏ.எஸ். லத்தீப்.

குறித்த கடிதத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகளுக்கு அமைய, விரிவான விசாரணைகளை மேற்கொண்டு அதன் முன்னேற்ற அறிக்கையை விரைவில் சமர்ப்பிக்குமாறு சட்டமா அதிபர் திணைக்களம் வலியுறுத்தியுள்ளது.

தாக்குதல் குறித்து முன்கூட்டியே தகவல்கள் கிடைத்தும் அதனைத் தடுக்கத் தவறியமை மற்றும் கடமை உதாசீனம் ஆகிய குற்றச்சாட்டுகள் தொடர்பிலேயே இந்த விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

# துப்பாக்கிதாரியை நாற்காலி, கத்தியால் தாக்கி விரட்டியடித்த வீட்டு உரிமையாளர்

## களுத்துறையில் துணிகரம்



தன்னைச் சுட முயன்ற இனந்தெரியாத துப்பாக்கிதாரி மீது, வீட்டு உரிமையாளர் நாற்காலி மற்றும் வெட்டுக் கத்தியால் தாக்குதல் நடத்தி அவரைப் பொலிஸாரிடம் சிக்க வைத்துள்ள அதிரடிச் சம்பவம் களுத்துறையில் பதிவாகியுள்ளது.

களுத்துறை, ரஜவத்த பகுதியைச் சேர்ந்த "பெத்தா" என்பவர், பாதிக்கப்பட்ட நபரிடம் 30 ஆயிரம் ரூபா கடன் பெற்றிருந்தார். அந்தக் கடனைத் திருப்பித் தருவதாகக் கூறி, அவர் மற்றொரு நபருடன் பாதிக்கப்பட்டவரின் வீட்டுக்கு வந்துள்ளார்.

இதன்போது, அவருடன் வந்த இனந்தெரியாத நபர் திடீரெனத் தனது கைத்துப்பாக்கியை எடுத்து வீட்டு உரிமையாளர் மீது சூடு நடத்த முயற்சித்துள்ளார்.

சற்றும் எதிர்பாராத இந்தத் தருணத்தில் நிலைகுலையாத வீட்டு உரிமையாளர், அருகில் இருந்த நாற்காலியால் துப்பாக்கிதாரியை பலமாகத் தாக்கியதுடன், வீட்டிலிருந்த வெட்டுக் கத்தியை எடுத்து அவர் மீது பதில் தாக்குதல் நடத்தியுள்ளார்.

வீட்டு உரிமையாளரின் இந்த ஆவேசமான எதிர்த்தாக்குதலை எதிர்பார்க்காத துப்பாக்கிதாரி, காயமடைந்த நிலையில் அங்கிருந்து தப்பியோட முயன்றுள்ளார்.

சம்பவம் குறித்துத் தகவல் அறிந்த பொலிஸார் விரைந்து செயற்பட்டு, காயமடைந்த நிலையில் இருந்த துப்பாக்கிதாரியைக் கைது செய்தனர்.

அவரிடமிருந்து ஒரு கைத்துப்பாக்கி, 4 தோட்டாக்கள் ஆகியவற்றைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

விசாரணையில் கைது செய்யப்பட்ட நபர் அலவ்வ பகுதியைச் சேர்ந்தவர் எனத் தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் திட்டமிடப்பட்ட படுகொலை முயற்சியாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படும் நிலையில், களுத்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளனர்.




# பதவிகளைத் துறந்துவிட்டு உடனே வீட்டுக்குப் போங்கள்!

## கிரிக்கெட் நிர்வாகத்துக்கு எதிராக கொழும்பில் வெடித்த போராட்டம்

தேசியகிரிக்கெட்அணியின்தொடர்ச்சியான பின்னடைவுகளினால் அதிருப்தியடைந்துள்ள கிரிக்கெட் இரசிகர்கள் மற்றும் சிவில் அமைப்பினர் இணைந்து, நேற்று கொழும்பிலுள்ள ஶ்ரீலங்கா கிரிக்கெட் தலைமையகத்திற்கு முன்னால் எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

பௌத்த மதகுரு ஒருவரின் தலைமையில் ஒருங்கிணைக்கப்பட்ட இந்தப் போராட்டத்தில் கிரிக்கெட் இரசிகர்கள் சிலர் கலந்துகொண்டனர்.

ஶ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் ஷம்மி சில்வா உள்ளிட்ட தற்போதைய நிர்வாக சபை உறுப்பினர்கள் அனைவரும் உடனடியாகப் பதவிகளைத் துறந்து "வீட்டுக்குச் செல்ல வேண்டும்" என்பதே போராட்டக்காரர்களின் பிரதான கோரிக்கையாக இருந்தது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் முன்வைத்த முக்கிய குற்றச்சாட்டுகள்:-

* சர்வதேச மட்டத்தில் இலங்கை கிரிக்கெட்அணிசந்தித்துவரும்தொடர்தோல்விகளுக்குத் தற்போதைய நிர்வாகமே முழுப் பொறுப்பேற்க வேண்டும்.

* உள்நாட்டு கிரிக்கெட்டின் தரத்தை உயர்த்துவதற்கும், திறமையான வீரர்களைக் கண்டறிவதற்கும் தற்போதைய அதிகாரிகள் தவறிவிட்டனர்.

*விளையாட்டின் வீழ்ச்சி: கிரிக்கெட் விளையாட்டின் வீழ்ச்சிக்குத் தற்போதைய நிர்வாகத்தின் தவறான தீர்மானங்களே நேரடிப் காரணம்.

எதிர்ப்புப் போராட்டம் காரணமாக கிரிக்கெட் தலைமையகத்தைச் சூழவுள்ள பகுதிகளில் கலகத் தடுப்புப் பொலிஸார் உள்ளிட்ட பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், போராட்டம் மிகவும் அமைதியான முறையில் இடம்பெற்றதுடன், எவ்வித வன்முறைச் சம்பவங்களும் பதிவாகவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கை கிரிக்கெட்டில் பாரிய மாற்றங்களைச் செய்யாவிட்டால், எதிர்வரும் நாள்களில் போராட்டங்களை மேலும் தீவிரப்படுத்தப் போவதாகப் போராட்டக்காரர்கள் இதன்போது எச்சரிக்கை விடுத்துள்ளனர்.



# ஒரே நாளில் 891 பேர் அதிரடிக் கைது!

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய, நாட்டில் போதைப்பொருளை தடுக்கும்நோக்கிலான "முழுநாடுமேஒன்றாக" எனும் தேசிய திட்டத்தின் கீழ், நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் சுமார் 891 பேர் போதைப்பொருள்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், தடுப்புக்காவல் உத்தரவு பெற்ற 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், சட்டவிரோத சொத்துக்கள் தொடர்பான விசாரணைகளுக்கமைய 4 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இதே வேளை, 896 சோதனைகள் நடத்தப்பட்டுள்ளதுடன், 3 பேர்புனர்வாழ்வுநிலையத்துக்கு அனுப்பிவைக்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளின்போது சிக்கிய சந்தேக நபர்கள் வைத்திருந்த போதைப் பொருள்களையும் இதன்போது பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

அதற்கமைய, சந்தேகநபர்களிடமிருந்து, 296 கிராம் ஹெரோயின், 540 கிராம் ஐஸ், 23 கிராம் 800 மில்லிகிராம் கொக்கெய்ன், 100 கிலோகிராம் 766 கிராம் கஞ்சா, 46 ஆயிரத்து 530 கஞ்சா செடிகள், 300 கிராம் குஷ் ரக போதைப் பொருள், 78 கிராம் ஹஷீஷ் ரக போதைப் பொருள், 246 போதை மாத்திரைகள், 107 கிராம் 600 மில்லிகிராம் மதன மோதகம் மற்றும் 999 கிராம் மாவா போதைப்பொருள் என்பன கைப்பற்றப் பட்டுள்ளன.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## இரகசியம் பரகசியம்...

அதை மறுத்துப் பேசிய சுமந்திரன், ஜனாதிபதி பதவிக்கு அநுர குமார திஸ நாயக்க வந்ததும் தம்மை நீதி அமைச்சர் பதவியை ஏற்கும்படி கோரினார் என்ற உண்மையை அச்சமயம் வெளியிட்டார்.

இது மாத்திரம் அல்ல, அதற்கு முன னர் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அநுர குமார திஸநாயக்க இந்த நாட்டின் பிரதமராக சுமந்திரன் வரவேண்டும் என்று வலியுறுத்தி இருந்தார் என்பதையும் சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

தனிப்பட்ட நலனுக்காக – சுய லாபத் திற்காக – செயல்படுவது என்றால் அவற்றையெல்லாம் நாங்கள் செய் திருப்போம் என்றார் அவர்.

இங்கு மலையகத் தமிழ் தலைமைகள் ஒற்றுமையாக இருக்கிறார்கள், முஸ்லிம் தலைவர்கள் ஒற்றுமையாக இருக்கிறார் கள் என்று சம்பந்தப்பட்ட ஊடகவியலாளர் குறிப்பிட்டார். ஆனால் மலையகத் தமிழர்கள் தரப்பில் மனோ கணேசனும் மற்றவர்களும் அமைச்சர்களாக இருந் திருக்கிறார்கள். முஸ்லிம்கள் தரப்பில் ஹக்கீம் பல தடவைகள் அமைச்சராக இருந்திருக்கிறார். நாங்கள் சுயநலத் துக்காக அரசுகளுடன் ஊடாடியவர்கள் என்றால் பதவிகளை நோக்கிப் போயி ருப்போம். எங்களில் யாரும் அப்படிப் போனவர்கள் அல்லர் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன் என்றார் சுமந்திரன்.

தமிழ்த் தரப்புக்கள் மீது குற்றம் சாட்ட வேண்டும் என்பதற்காக சகட்டுமேனிக்கு அதைச் செய்வது பொருத்தமற்றது.

இந்தக் கூட்டத்தில் பேசிய ரெலோத் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி., இங்கிருக்கும் தமிழ்த் தலைவர்கள் யாரும் (அச்சமயம் மனோ கணேசன், சுமந்திரன், சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் ஹக்கீம் ஆகியோர் இருந்தனர்) ரணில் அரசிடம் 'பார் பெர்மிட்' பெற்ற வர்கள் அல்லர் என்று சுட்டிக்காட்டினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

* * *

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் பிரதிநிதிகள் குழு ஒன்று வரும் ஏழாம் திகதி முதல் பதினோராம் திகதி வரை புதுடெல்லிக்கு விஜயம் செய்ய இருக் கின்றது.

இந்திய சட்டத்தரணிகள் சங்கத்தின் அழைப்பின் பேரில் நடைபெறும் ஒரு கூட்டுத் தொடர்பாடல் நிகழ்வுக்காகவே இலங்கை சட்டத்தரணிகள் குழு புதுடில்லி செல்கிறது.

சுமார் 25 பேர் கொண்ட இலங்கை சட்டத்தரணிகள் அணியில் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன், சட்டத்தரணி கேசவன் சயந்தன், ஜொனி மதுரநாயகம் உட்பட பல வடக்கு சட்டத்தரணிகளும் இடம்பெறுகின்றனர்.

ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் சட்டத்தரணி அணிகளில் ஒருவராக இந்தச் சுற்றுலாவில் பங்கு பற்றுகின்றார். தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலா ளரான அவர் வேறு ஏதும் சந்திப்புக்களில் கலந்து கொள்வாரா என்பது பற்றி தகவல் எதுவும் இல்லை.

* * *

இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார் கிளையின் ஏற்பாட்டில் அடம்பன் பகுதியில் பொதுமக்கள் சந்திப்பு ஒன்று நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மதியம் நடைபெற்றதான ஒரு செய்தி 'அடம்பனில் தமிழரசின் மக்கள் சந்திப்பு' என்ற தலைப்பில் நேற்றைய 'காலை முரசு' இதழின் வெளியாகி இருந்தது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மன்னார்க் கிளையின் தலைவரும் இதில் பங்குபற்றினார் என அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டு இருந்தபோதிலும் அந்தச் செய்தி தவறு என இப்போது சுட்டிக் காட்டப்படுகிறது.

அந்தக் கூட்டம் தமிழரசு கட்சியின் மக்கள் சந்திப்போ அல்லது கட்சியின் மன்னார் கிளை ஏற்பாடு செய்ததோ அல்ல.

வடக்கில் பல இடங்களிலும் முன்னாள் போராளிகள் ஆங்காங்கே இலங்கைத் தமிழரசு கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரனை சந்தித்துக் கலந்துரையாடி வருகின்றனர். அந்த வரிசையில் மன்னாரில் சுமார் 75க்கும் அதிகமான போராளிகளை சுமந்திரன் சந்தித்து கலந்துரையாடிய கூட்டமே சனியன்று அடம்பனில் நடைபெற்றது. அது தமிழரசு கட்சியின் கட்சிக் கூட்டம் எனத் தவறுதலாக முரசு இதழில் செய்தி வெளியாகியமை கூட்ட ஏற்பாட்டாளர்கள் மத்தியில் சிறு குழப்பத்தை ஏற்படுத்தியிருப்பதாக தெரிகிறது. எனது பத்தி மூலம் அந்த தகவலின் தவறைத் திருத்திக் கொள்வது பொருத்தம் என்று கருதியே இந்த விளக்கம்.

* * *

இலங்கைக் கிரிக்கெட் அமைப்பின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் மண்டைதீவில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமைக் கும் திட்டம் சுற்றுச்சூழல் கண்காணிப்பு அமைப்பின் தலையீட்டால் இடை நிறுத்தப்பட்டிருக்கும் நிலையில் அந்தத் திட்டத்தை அடியோடு கைவிடுமாறு சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்திருக்கின்றனர்.

பொருளாதார ரீதியிலும், சுற்றுச்சூழல் ரீதியிலும் அது பொருத்தமற்ற இடம் என்பதோடு, பிரதேசத்தில் வாழும் மக்களின் வாழ்வாதாரத்திலும் இந்தத் திட்டம் பேரழிவை ஏற்படுத்தும் என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

சர்வதேச கிரிக்கெட் மைதானம் ஒன்றை அமைப்பதற்கு 'மிகவும் மோச மான இடம் அது' என்று சுற்றுச் சூழல் பாதுகாப்பு ஆர்வலர்கள் சுட்டிக்காட்டி உள்ளனர்.

ஒரு சர்வதேச கிரிக்கெட் மைதானத்திற் குரிய புல்வெளிகளைப் பேணுவதற்கும், வறண்ட மாதங்களில் பசுமையைப் பராமரிப்பதற்கும், சர்வதேச கிரிக்கெட் மைதானத்தை ஒட்டி எழக்கூடிய ஹோட்டல் கள் மற்றும் வளர்ச்சிப் பணிகளுக்கும் தேவையான தண்ணீரைக் கொண்டிருக் கும் பசுமையான இடம் அதுவல்ல என்ற கள யதார்த்தத்தை அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். அந்தப் பிரதேசம் மழை நீரை மட்டும் நம்பி இருக்கும் ஒரு சுற்றாடல் கட்டமைப்பு என்பதையும் அவர்கள் தெளிவுபடுத்துகின்றனர்.

சதுப்பு நிலங்கள், உப்புச் சதுப்பு நிலங்கள், சேற்றுப் படுக்கைகள் கொண்ட வித்தியாசமான சுற்றுச்சூழல் நிலவுகின்ற அந்தப் பிரதேசத்தில் சூழலை முழு அளவில் குழப்பும் இந்தத் திட்டத்தின் மூலம் அப்பகுதி பாதிப்படையும் என்று அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

வடக்கில் ஒரு கிரிக்கெட் மைதானத்தை அமைப்பதன் மூலம் அரசியல் சாதகங் களை பெற்றுக் கொள்ள விரும்புகின்ற தரப்புகள், உரிய கள களஆய்வு, தேடல் மற்றும் பரிசீலனை இன்றி அவசர அவசரமாக சர்வதேச மைதானத்தை அங்கு அமைக்கும் முடிவை எடுத்திருக் கின்றன என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

அரசியல் லாபம் மட்டும் தேடுபவர் களுக்கு மற்ற விடயங்கள் இலகுவில்கண் களில் பட மாட்டா என்பது உண்மைதான்.

## ஊடகவியலாளர்கள் மீதான...

தமிழ் ஊடகவியலாளர்கள் என்று இல்லை, சிங்கள ஊடகவியலாளர்களுக்கு எதிராகவும்கூட கொடூரங்கள் இழைக்கப்பட் டன. படுகொலைகள் மேற்கொள்ளப்பட் டன. அவை தொடர்பில் நீதி விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை. நீதி, நேர்மை யான புலனாய்வுகள் முன்னெடுக்கப்பட வில்லை. குற்றம் இழைத்தோர் சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை.

ஆகவே இவை பற்றி எல்லாம் விசாரிப் பதற்குத் தனியான விசேட ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று நியமிக்க வேண்டும். அப்படி நியமித்தால் பல உண்மைகளை வெளிக்கொணர வாய்ப்புக் கிட்டும்.

படைத் தரப்பில், புலனாய்வுப் பிரிவில் இருந்தவர்கள் மேற்கொண்ட நடவடிக்கை கள் பற்றிய விடயங்கள் இப்போது மெல்ல மெல்ல வெளிப்படத் தொடங்கியிருக் கின்றன.

இந்தச் சமயத்தில் ஊடகங்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்கள், குற்றங் கள் குறித்து விசாரிப்பதற்கு விசேட ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று நியமிக் கப்படுமானால் அதன் மூலம் பல உண் மைகள் வெளிவர வாய்ப்பு உண்டு.

ஆகவேசிறுபான்மையினரின்கட்சிகள் ஒன்றிணைந்து இத்தகைய விசேட ஜனாதி பதி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படு வதற்கு வலியுறுத்த வேண்டும்."

– இப்படி சாரப்பட ஹக்கீமின் நேற் றைய பேச்சு அமைந்தது.

## இலங்கையர்கள் உட்பட...

காயமடைந்தவர்களில் இலங்கையர் களும் அடங்குகின்றனர் என்று ஐக்கிய அரபு இராச்சிய பாதுகாப்பு அமைச்சு உத்தி யோகபூர்வமாக அறிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் தொடக்கம் ஆரம்பமான இந்தத் தாக்குதல்களில், இதுவரை 165 பாலிஸ்டிக் ஏவுகணைகள், 2 குரூஸ் ஏவுகணைகள் மற்றும் 541 ட்ரோன்கள் ஏவப்பட்டன என்று கண்டறியப்பட்டுள்ளது.

இதில் பெரும்பாலானவை தங்களது வான் பாதுகாப்பு அமைப்புகளால் இடை மறித்து அழிக்கப்பட்ட போதிலும், அவற் றின் சிதறல்கள் குடியிருப்புப் பகுதிகளில் விழுந்ததில் இலங்கை, இந்தியா, பாகிஸ் தான் உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 58 பேருக்கு சிறு காயங்கள் ஏற்பட் டுள்ளன.

இந்தத் தாக்குதல்களில் பாகிஸ்தான், நேபாளம் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ள துடன் 35 ட்ரோன்கள் நிலப்பரப்பில் வீழ்ந்ததில் சில பொதுமக்களின் சொத்துக் களுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளது.

வான் பாதுகாப்புப் படையினரால் 152 பாலிஸ்டிக் ஏவுகணைகளும், அனைத்து குரூஸ் ஏவுகணைகளும், 506 ட்ரோன்க ளும் வெற்றிகரமாக அழிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள ஏவுகணைகள் கடலில் வீழ்ந்தன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எந்தவொரு அச்சுறுத்தலையும் எதிர்கொள்ளத் தயார் நிலையில் இருப்பதாகத் தெரிவித்துள்ள ஐக்கிய அரபு இராச்சியத்தின் பாதுகாப்பு அமைச்சு, அந்நாட்டில் வாழும் குடிமக்கள், புலம் பெயர் குடியிருப்பாளர்கள் மற்றும் பார்வை யாளர்களின் பாதுகாப்புக்கு முதலிடம் வழங்கப்படும் என்றும் உறுதியளித்துள் ளது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ஏமாற்றுத் தந்திரம்

இலங்கையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரங்கள் தொடர்பில், எவ்வித அரசியல் தலையீடுகளுமின்றிச் சட்டத்தின் அடிப்படையில் முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

நோர்வே நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற விசேட விவாதத்தின்போது, அந் நாட்டின் வெளிவிவகார அமைச்சர் எஸ்பென் பார்த் ஐடே இலங்கையின் நிலைவரம் குறித்து ஆழ்ந்த கவலையை வெளியிட்டிருந்தார். குறிப்பாக, வடக்கு - கிழக்கில் நில அபகரிப்பு, இராணுவமயமாக்கல், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் மற்றும் செம்மணி புதைகுழி விவகாரத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான புதிய அரசு வெளிப்படையான விசாரணைகளை நடத்த வேண்டும் என அவர் வலியுறுத்தியிருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார ஊடகங்களுக்கு விசேட விளக்கமளித்துள்ளார்.

யுத்தம் முடிவடைந்த காலத்தில் இருந்தே இத்தகைய வாய்ச்சவடால் பேச்சுக்களை நீதி அமைச்சராகவும் அரசாங்கங்களின் பொறுப்பான தலைவர்களாகவும் இருந்தவர்கள் பலர் கூறி வந்திருக்கிறார்கள். அதைக் கேட்டுக் காது புளித்து விட்டது. அதே உபதேசத்தைத்தான் இப்போதைய நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்காரவும் முன் வைத்திருக்கிறார்.

யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், அடிப்படை மனித உரிமை மீறல்கள் போன்றவை தொடர்பில் சர்வதேச நியமங்களுக்கு அமைவான நீதி விசாரணைகள் உரிய முறைப்படி நடக்க வேண்டும் என்று யுத்தம் முடிவடைந்த காலத்தில் இருந்தே ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் தீர்மானங்கள் மேல் தீர்மானங்கள் ஊடாக சர்வதேசம் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது.

இந்த விடயத்தில் குற்றச்சாட்டு இலங்கைப் படைகள் மீது நேரடியாக சுமத்தப்படுவது மறுக்கப்படக் கூடியது அல்ல. ஆனால் இலங்கை இராணுவத்தினருக்கோ, ஏனைய படையினருக்கோ எதிராக விசாரணைகளே நடத்த மாட்டோம் என்பதில் விடாப்பிடியாக அடம்பிடித்துக் கொண்டிருக்கும் ஜே.வி.பி. உட்பட்ட தரப்பினர் அரசு தலைவர்களாக இருந்து கொண்டு, சட்டத்தின் அடிப்படையிலான முறையான விசாரணைகள் நடைபெறும் என்று திரும்பத் திரும்ப நாட்டு மக்களின் காதிலும் சர்வதேசத்தின் காதிலும் பூச்சுற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

சிங்களத்தின் அந்தப் பூச்சுற்றல் அஞ்சல் ஓட்டத்தில் இப்போது அஞ்சல் கோல் தற்போதைய நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்காரவின் கைகளில் உள்ளது. அதனால் தான் அவரும் அதே பூச்சுற்றல் பல்லவியைப் பாடுகிறார்.

முறையான நீதி விசாரணை என்பது சர்வதேச நியமங்களுக்கு அமைவாக நடைபெற வேண்டும். குற்றச்சாட்டுக்கு உள்ளாகும் தரப்பே குற்றங்களை விசாரிக்கும் தரப்பாகவும் இருக்கும் கேலிக்கூத்து பொருத்தமற்றது.

இலங்கைப் படைகளுக்கு எதிராக விசாரணை நடத்த இடமளியோம் என்று மிக உறுதியான பேரினவாத மேலாதிக்க நிலைப்பாட்டில் இருந்து கொண்டு, சட்டத்தின் அடிப்படையில் முறையான விசாரணை என்று நீதி அமைச்சர் கயிறு விடுவது முழு உலகையும் ஏமாற்றும் தந்திரமாகும்.

# மயானத்துக்குள் சிக்கிய கைத்துப்பாக்கி!

## பொலிஸாரின் சுற்றிவளைப்பில் கொலைச் சதி முறியடிப்பு



கட்டானை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஹாயாவத்தை மயானத்துக்கு அருகிலுள்ள உட்பாதையொன்றில், புதருக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைத் துப்பாக்கி ஒன்றும், 4 தோட்டாக்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

நீர்கொழும்பு பிராந்திய குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, நேற்று அதிகாலை விசேட சுற்றிவளைப்பு ஒன்று முன்னெடுக்கப்பட்டது. இதன் போது, மயானப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் வெளி நாட்டில் தயாரிக்கப்பட்ட ஒரு கைத் துப்பாக்கி, 4 தோட்டாக்கள் ஆகியன கண்டெடுக்கப்பட்டன.

ஏதேனும் ஒரு பாரிய குற்றச் செயலை அல்லது படுகொலையை அரங்கேற்றுவதற்காக இந்த ஆயுதம் அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்ததா என்ற கோணத்தில் பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக கட்டானை பொலிஸாரும், நீர்கொழும்பு பிராந்திய குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் இணைந்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த ஆயுதத்தை அங்கு கொண்டு வந்து மறைத்து வைத்த நபர்களைக் கண்டறிய விசேட தேடுதல் வேட்டை முடுக்கிவிடப்பட்டுள்ளது.

# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-13, ஜின்னா வீதி, 82 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் எஸ்.அப்துல்காதர் பெண் கே.எம். நாச்சியா என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் ஆதியில் 09.05.1921 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு எஸ். சபாபதிப்பிள்ளை முகதாவில் நிறைவேற்றப்பட்ட 12072ம் இலக்க உறுதிமூலம் வந்தடைந்ததாகவும் குறித்த உறுதி தொலைந்துவிட்டதாகவும் தொலைந்தமையை உறுதிப்படுத்தி மாவட்ட காணிப்பதிவகத்தால் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

பின்னர் குறித்த ஆதனத்தை சுல்தான் மொகைதீன் சுல்தான் அப்துல்காதர், சுல்தான் அப்துல் காதர் மொஹமட் சாகுல் ஹமீட், சுல்தான் அப்துல் காதர் மொஹமட் சுல்தான் மொகைதீன்,சுல்தான் அப்துல் காதர் அப்துல் றகீம் 03.10.1966ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு செல்லையா மகேசன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 417ம் இலக்க சீதன உறுதி மூலம் மீரா மொகைதீன் மகரூப் பெண் றகீலா என்பவருக்கு வழங்கியுள்ளார்.

பின்னர் குறித்த ஆதனத்தை முஹமட் மஹறூப் நஸ்லி, முஹமது மஹறூப் முகமது சுஹைல், முஹமது மஹறூப் முகமது றிஸ்வான், மஹறூப் நஸ்ரத்கான், முஹமது மஹறூப் முகமது நஸாயி 15.09.2025ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ம.அ.வினோறாஜ் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 741ம் இலக்க அறுதி உறுதி மூலம் மொஹிடீன் சரபுல் அனாம் மொஹமட் செஹான் என்பவருக்கு வழங்கியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை, யாழ்ப்பாண பிரதேசசெயலக பிரிவு யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட J/87 ம் இலக்க கிராம அலுவலர் பிரிவில் Æஒட்டைப்புளியடி” நிலப்பரப்பு 3/4. வீடும் மற்றும் கிழக்கு எல்லையில் அமைந்துள்ள கிணற்றில் 4/5 பங்கும். இது முன்னுறுதிப்படியும் மிக நீண்ட கால ஆட்சிப்படியும் தற்போது நன்கு வரையறுக்கப்பட்டு உத்தரவு பெற்ற நில அளவையாளர் ந.கேதீஸ்வரன் அவர்களால் 31.07.2025ம் திகதி அளந்து விபரித்த 6388ம் இலக்க நில அளவை படத்தின்படி துண்டு-1 எனக்காட்டப்பட்டுள்ள ஆதனத்தின் மொத்த விஸ்தீரணம் நிலப்பரப்பு பூச்சியம் குளி பதின்மூன்று தசம் மூன்று பூச்சியம் (நில.பரப்பு 0குளி 13.30) மற்றும் சேதமடைந்த வீடும்.

இதற்கெல்லைகள்.-
கிழக்கு:-நாதனின் ஆதனம்.
வடக்கு:-ஜின்னா வீதி
மேற்கு:-சிவபாதசுந்தரம் பெண் சற்சொருபியின் ஆதனம்.
தெற்கு:-நசுருதீன் முகமது சையீத்தின் ஆதனம்.
இதடங்கலும்.

தற்போது இவ்வாதனத்தை மொஹிடீன் சரபுல் அனாம் மொஹமட் செஹான் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது மொஹிடீன் சரபுல் அனாம் மொஹமட் செஹான் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

முதல்வர்,
யாழ் மாநகரசபை.







# பெரியவிளாத்திக்குளம் புல்மோட்டைவெளிக்கு நேரில் சென்ற ரவிகரன் அணைக்கட்டு அமைத்தல், வாய்க்கால் சீரமைப்பு தொடர்பில் ஆராய்வு

**(விஜயரத்தினம் சரவணன்)**

வவுனியா – ஓமந்தை கமநலசேவை நிலையப் பிரிவிற்குட்பட்ட பெரியவிளாத்திக்குளம் கமக்கார அமைப்பின் கீழ் காணப்படும்புல்மோட்டைவயல்வெளிக்கு நேரடியாகச் சென்ற வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் புல்மோட்டை வெளிக்கான அணைக்கட்டை அமைத்தல் மற்றும் வாய்க்கால் சீரமைப்புத் தொடர்பில் ஆராய்ந்துள்ளார்.

வவுனியா – ஓமந்தை, பெரியவிளாத்திக்குளம் பகுதியில் கடந்தவருடம் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனால் மக்கள் குறைகேள் சந்திப்பொன்று நடாத்தப்பட்டிருந்தது. இதன்போது புல்மோட்டை வயல்வெளிக்கான அணைக்கட்டு அமைப்பது தொடர்பிலும், வாய்க்காலை சீரமைப்பதுதொடர்பிலும் அப்பகுதி மக்களால் நாடாளுமன்ற உறுப்பினரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் கடந்த 13.02.2026 அன்று இடம்பெற்ற வவுனியா பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் இந்த புல்மோட்டை வெளிக்கான அணைக்கட்டை அமைக்குமாறும், நீர்ப்பாசன வாய்க்கால் சீரமைப்பை மேற்கொள்ளுமாறும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனால் வலியுறுத்தப்பட்டிருந்தது.

இதையடுத்து கூடியவிரைவில் உரிய திட்டங்களில் உள்வாங்கப்பட்டு அணைக்கட்டை அமைக்கவும், நீர்ப்பாசன வாய்க்காலைச் சீரமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுமென வவுனியா பிரதேசசெயலாளர் மற்றும் ஓமந்தை கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரால் பதில் வழங்கப்பட்டிருந்தது.

இதன் தொடர்சியாக கடந்த 26.02.2026அன்று குறித்த புல்மோட்டை வெளிப்பகுதிக்கு நேரடியாகச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் புல்மோட்டைவெளி அணைக்கட்டு அமைக்கவேண்டிய இடத்தைப் பார்வையிட்டதுடன், சீரமைக்கவேண்டிய நீர்ப்பாசன வாய்க்காலையும் பார்வையிட்டார். அத்தோடு பெரியவிளாத்திக்குளம் கமக்கார அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகளுடன் கலந்துரையாடி நிலைமைகளையும் கேட்டறிந்துகொண்டார்.

நாடாளுமன்ற உறுப்பினரால் வவுனியா பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்த விடயங்கள் தொடர்பில் பேசப்பட்ட பிற்பாடு ஓமந்தை கமநல சேவைநிலயத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் வருகை தந்து அணைக்கட்டு அமைப்பது தொடர்பில் மதிப்பீட்டு ஆய்வுகளை மேற்கொண்டார் என விவசாயிகளால் நாடாளுமன்ற உறுப்பினரிடம் தெரிவிக்கப்பட்டது.












# ‘புனிதபூமி மக்கள் கட்சி’ என்ற கட்டமைப்பு நேற்று கிளிநொச்சியில் அங்குரார்ப்பணம்

“புனிதபூமி மக்கள் கட்சி“ நேற்று கிளிநொச்சியில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

கட்சியின் தலைவர் கணபதிப்பிள்ளை ஆனந்தமூர்த்தி (ஜேம்சன்) தலைமையில் இடம்பெற்ற கட்சியின் அங்குரார்ப்பண நிகழ்வில் உபதலைவர் தியாகராசா ஜெகதீஸ்வரன், செயலாளர் சசிகரன் மிதுலா, உப செயலாளர் அருளானந்தம் மதிவன்னன், பொருளாளர் ஜெகநாதன் ரகுநாதன், கட்சியின் ஆலோசகர் கார்த்திகேசு யோகராசா, யாழ்.மாவட்ட அமைப்பாளர் சிவகுரு மதிவண்ணன், முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளர் திருச்செல்வம் இரவீந்திரன், கட்சியின் ஊடக பேச்சாளர் பேபி வேலுப்பிள்ளை (தேசத்தாய்) ஆகியோர் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

அங்குரார்ப்பண நிகழ்வில் தொடக்க வுரை நிகழ்த்திய புனிதபூமி மக்கள் கட்சியின் தலைவர் ஜேம்சன் கூறுகையில் –

வடக்கு – கிழக்கு மக்களின் பொருளாதார மேம்பாட்டை இலக்காக கொண்டு இந்தக் கட்சியை அங்குரார்ப்பணம் செய்துள்ளோம். போருக்குப் பிந்திய சூழலில் தமிழ் மக்கள் பொருளாதார ரீதியாக கையறுநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். மறுபக்கம் சமூக சீர்கேடுகளும், போதைப்பொருள் கலாசாரமும் மலிந்துள்ளது. இந்த நிலையில் இருந்து எமது சமூகத்தை மீட்டெடுப்பதற்கான அரசியல் இங்கு வெறுமையாக உள்ளது.

அந்த அரசியல் வெறுமையை நிவர்த்தி செய்வதுதான் நம் முதன்மையான அரசியல் இலக்காகும். அதற்காக வடக்கு – கிழக்கு மாகாணங்களின் 8 மாவட்டங்களிலும் நாம் பணியாற்றவுள்ளோம். எங்களின் இந்த பணிக்கு மக்களிடம் இருந்து ஆதரவு வழங்கப்படுகிறது.

முப்பது வருடங்களாக தூய்மையான இலக்குடன் பயணித்த நாம் இனிமேலும் அந்த தூய்மையான பணியை மக்களுக்காக முன்கொண்டு செல்வோம். – என்றார்.




# சாதாரண தரப் பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான உயர்தர வகுப்புகள் மார்ச் 25ஆம் திகதிக்குப் பின்பே

## கல்முனை மாநகர சபை இறுக்கமான கட்டுப்பாடு



(அஸ்லம் எஸ்.மௌலானா)

இம்முறை க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான க.பொ.த. உயர் தர புதிய வகுப்புகள் யாவும் எதிர்வரும் மார்ச்–25 ஆம் திகதிக்குப் பின்னரே ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று கல்முனையில் இயங்கும் தனியார் கல்வி நிலையங்களுக்கு கல்முனை மாநகர சபை அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

பெற்றோர்கள் மற்றும் பொது நல அமைப்புகள் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக அந்த மாணவர்களின் நலன் கருதி இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.ரி.எம். றாபி தெரிவித்துள்ளார்.

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை முடிந்த கையோடு உடனடியாகவே க.பொ.த. உயர் தரத்திற்கான புதிய வகுப்புகளை ஆரம்பிக்க சில தனியார் கல்வி நிலையங்கள் ஏட்டிக்குப் போட்டியாக முனைகின்றன என முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இது விடயமாக ஏலவே சொல்லப்பட்ட ஆலோசனைகளை இந்தக் கல்வி நிலையங்கள் பொருட்படுத்தாமல் செயற்படுவது கவலைக்குரிய விடயமாகும்.

ஆகையினால் இந்த விடயத்தில் கல்முனை மாநகர சபை இவ்வறிவுறுத்தலை விடுப்பதுடன் இறுக்கமான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் தீர்மானித்துள்ளது. – என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.









# மக்களின் காணிகளை உடனே விடுவிக்க நடவடிக்கை எடுங்கள்

## சுற்றாடல் அமைச்சரிடம் வடக்கு ஆளுநர் வலியுறுத்து

வனவளத் திணைக்களம் மற்றும் வனஉயிரிகள் திணைக்களம் ஆகியவற்றால் கையகப்படுத்தப்பட்டுள்ள மக்களின் வாழ்விடங்கள் மற்றும் வாழ்வாதாரக் காணிகளை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துமாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், சுற்றாடல் அமைச்சரிடம் வலியுறுத்தியுள்ளார்.

தேசிய சுற்றாடல் சட்டவரைவு திருத்தம் தொடர்பான அறிவூட்டல் மற்றும் கருத்துக்கேள் கலந்துரையாடல், சுற்றாடல் அமைச்சர் கலாநிதி தம்மிக பதபெந்தியின் பிரசன்னத்துடன் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலாளர் ம.பிரதீபனின் வரவேற்புரையைத் தொடர்ந்து சபையில் உரையாற்றிய ஆளுநர்,

“ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் பதவியேற்றதன் பின்னர், வடக்கு மாகாணத்தை நோக்கிப் பல முதலீட்டாளர்கள் வருகை தருகின்றனர். ஆனால், அவர்கள் தமக்கான முதலீட்டு அனுமதிகளைப் பெற்றுக்கொள்வதில் இன்றும் பல அதிகாரத்துவச் சவால்களை எதிர்கொள்கின்றனர். அனுமதிகளைப் பெற்றுக்கொடுக்கும் செயன்முறையை நாம் விரைவுபடுத்தாவிட்டால், முதலீட்டாளர்கள் விரக்தியடைந்து திரும்பிச் செல்லும் நிலையே ஏற்படும். எனவே, இந்த அனுமதிகளைப் பெற்றுக்கொள்வதில் சுற்றாடல் அமைச்சின் கீழான நிறுவனங்கள் ஏற்படுத்தும் தாமதங்கள் மற்றும் தடைகள் இயலுமானவரை விரைவாகக் களையப்பட வேண்டும்.” – என்று வலியுறுத்தினார்.

மேலும் தொடர்ந்து உரையாற்றிய ஆளுநர்,

“சுற்றாடல் அமைச்சின் கீழான வனவளத் திணைக்களம் மற்றும் வனஉயிரிகள் திணைக்களம் என்பன வடக்கு மாகாணத்தில் மக்களின் இயல்பு வாழ்க்கைக்குப் பெரும் இடையூறுகளை ஏற்படுத்தி வருகின்றன. போர் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்திருந்த காலகட்டத்தில்,

தொடர்ச்சி▼

















# மக்களின் காணிகளை உடனே விடுவிக்க நடவடிக்கை எடுங்கள்

## சுற்றாடல் அமைச்சரிடம் வடக்கு ஆளுநர் வலியுறுத்து

தொடர்ச்சி▲

அவர்கள் மீளத் திரும்புவதற்கு முன்னதாகவே எவ்வித களநிலை ஆய்வுகளோ அல்லது மக்கள் கலந்துரையாடல்களோ இன்றி, வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் மக்களின் காணிகள் இத்திணைக்களங்களால் சுவீகரிக்கப்பட்டுள்ளன. இதனால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் கடுமையான பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர். இதற்குத் தீர்வுகாணும் நோக்கில் தற்போதைய அரசாங்கம் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. அந்தச் செயன்முறைகளை மேலும் துரிதப்படுத்தி, மக்களின் வாழ்விடங்களையும் வாழ்வாதார நிலங்களையும் உடனடியாக விடுவிக்க வேண்டும்." – என்று கேட்டுக்கொண்டார்.

"எமது மாகாணத்தில் சுற்றாடல் தொடர்பான அதீத கரிசனையுடனேயே நாம் இருக்கின்றோம். எமக்கு அபிவிருத்தி அவசியம். அதற்காகச் சுற்றாடல் கரிசனை இன்றி நாம் அபிவிருத்தியைக் கோரவில்லை. பல தன்னார்வலர்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் மரம் நடுகைத் திட்டங்களை இங்குச் சிறப்பாக முன்னெடுத்துள்ளன. இதேவேளை, வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாண மாவட்டத்தில் திண்மக் கழிவகற்றல் என்பது தற்போது பெரும் சவாலாக மாறியுள்ளது. அதற்கான நிரந்தரத் தீர்வைக் காண்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கும் சுற்றாடல் அமைச்சின் கீழான நிறுவனங்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும்." – என்று ஆளுநர் குறிப்பிட்டார்.

இதனைத் தொடர்ந்து உரையாற்றிய கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகர்,

"எமது மாகாணத்தின் தற்போதைய நிலைமை மற்றும் முக்கியத்துவம் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு, இந்தச் சட்ட வரைவு திருத்தம் தொடர்பான உங்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களை அனைவரும் முன்வைக்க வேண்டியது அவசியமாகும்." – என்றார்.

மேலும், ”சுற்றாடல் அமைச்சின் கீழான வனவளத் திணைக்களம், வனஉயிரிகள் திணைக்களம் மற்றும் கரையோரப் பேணல் திணைக்களம் ஆகியவற்றின் செயற்பாடுகள் தொடர்பில் எமது மாகாண மக்களிடத்தில் பெரும் அதிருப்தி நிலவுகின்றது. இத்திணைக்கள அதிகாரிகளின் ஒத்துழைப்பு எமக்குச் சரிவரக் கிடைப்பதில்லை. ஆளுநர் சுட்டிக்காட்டியதைப் போன்று, முதலீட்டாளர்கள் திரும்பிச் செல்வதற்கு இந்த அதிகாரிகளின் மந்தகதியான செயற்பாடுகளே காரணமாக அமைந்துவிடக் கூடாது. எனக்குத் தெரிந்த ஒரு முதலீட்டாளர், அனுமதிக்காக ஆறு மாத காலமாக அலைந்து கொண்டிருக்கின்றார். எமது மாகாணத்துக்கு வரவேண்டிய 100 மில்லியன் ரூபா பெறுமதியான மிகபெரிய முதலீடொன்று, சுற்றாடல் அனுமதி கிடைக்காமை காரணமாக ஓராண்டுக்கு மேலாக இழுபறியில் இருக்கின்றது. இவ்வாறான நிலைகளுக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும்." – என்றும் அமைச்சர் இ.சந்திரசேகர் குறிப்பிட்டார்.

இதன் பின்னர், தேசிய சுற்றாடல் சட்டத் திருத்தம் தொடர்பில் சுற்றாடல் அமைச்சின் ஆலோசகர் கலாநிதி ரவீந்திர காரியவசம் சபையோருக்கு விரிவாக விளக்கமளித்தார். பின்னர் சுற்றாடல் அமைச்சர் கலாநிதி தம்மிக பதபெந்தி தனது கருத்துக்களையும் தீர்வுகளையும் முன்வைத்தார்.

”வடக்கு மாகாணத்தில் வனவளத் திணைக்களம் மற்றும் வனஉயிரிகள் திணைக்களம் ஆகியனவற்றின் கட்டுப்பாட்டிலுள்ள காணிகள் தொடர்பான பிரச்சினை, மாகாணத்தின் பிரதான பிரச்சினையாக உருவெடுத்துள்ளமை குறித்து எமக்கு முழுமையான தெளிவுள்ளது. போரின் பின்னர் குறித்த இரண்டு திணைக்களங்களும் தமக்கு ஒதுக்கப்பட்ட பிரதேசங்களை நேரடியாகக் கள ஆய்வுகளை மேற்கொள்ளாது, ஜி.பி.எஸ். தொழில்நுட்பத்தின் ஊடாகவே எல்லைப்படுத்தியுள்ளன. இதனால் எல்லை நிர்ணயங்களில் பல தவறுகள் நிகழ்ந்துள்ளன.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவும் இக்காணிப் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்காக, கடந்த ஓகஸ்ட் மாதம் விசேட அமைச்சரவை உப குழுவொன்று நியமிக்கப்பட்டது. இந்த உபகுழு தற்போது மாவட்ட ரீதியாகத் தரவுகளைச் சேகரித்து வருவதுடன், எதிர்வரும் ஆறு மாதங்களுக்குள் இது தொடர்பான தனது இறுதி அறிக்கையைச் சமர்ப்பிக்கும். அதன்பின்னர், இப்பிரச்சினைக்கு எம்மால் சுமூகமான தீர்வை எட்ட முடியும்." – என்றும் அவர் உறுதியளித்தார்.

மேலும் அவர் குறிப்பிடுகையில்,

"எமது அமைச்சின் கீழான நிறுவனங்களில் நிலவும் ஆளணி வெற்றிடங்கள் காரணமாகவே, முதலீட்டாளர்களுக்கான அனுமதிகளை வழங்குவதில் காலதாமதங்கள் ஏற்பட்டுள்ளன. தற்போது இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்காக 1,685 புதிய உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்வதற்கான அனுமதி எமக்குக் கிடைக்கப்பெற்றுள்ளது. இந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளில் இப்பிரதேசத்தைச் சேர்ந்தவர்களையும் அதிகளவில் விண்ணப்பிக்க ஊக்குவிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். இதன் ஊடாக, எதிர்காலத்தில் அனுமதிகள் வழங்குவதில் ஏற்படும் தாமதங்கள் முற்றாகச் சீராகும் என நம்புகின்றேன். அத்துடன், கடந்த காலங்களில் எமது அமைச்சின் கீழான நிறுவனங்களில் பணியாற்றும் அதிகாரிகள் சரியான முறையில் வழிநடத்தப்படவில்லை என்பதையும் நாம் கண்டறிந்துள்ளோம். அந்த நிலைமையையும் சீர்செய்வதற்குரிய துரித நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன." – என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இந்த விசேட கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஶ்ரீபவானந்தராஜா, யாழ். மாவட்ட செயலகப் பதவிநிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள், மற்றும் சுற்றாடல் அமைச்சின் கீழான திணைக்களங்களின் மாவட்ட, மாகாண மட்ட அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக நீக்கி எம் மக்களின் உணர்வுகளைப் புரிந்து நடவுங்கள்

## அரசிடம் மன்னார் ஆயர் வலியுறுத்தல்

(எஸ்.ஆர்.லெம்பேட்)

"பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக நீக்குவதில் அரசாங்கம் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். அதற்குப் பதிலாக வேறு சட்டங்களை முன்மொழியாது, எமது மக்களின் உண்மையான உணர்வுகளைப் புரிந்து கொண்டு அவர்களோடு பயணிக்க அரசு முன்வர வேண்டும்" – என்று மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

மன்னார் மறைமாவட்ட மக்களுக்கு எழுதியுள்ள தனது தவக்காலத் திருமடலிலேயே அவர் இந்த முக்கிய கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

அந்தத் திருமடலில் ஆயர் அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

"கத்தோலிக்க கிறிஸ்தவர்களாகிய நமது வழிபாட்டு ஆண்டில் தவக்காலம் மிகவும் புனிதமானது. திருநீற்றுப் புதனில் ஆரம்பித்து இயேசுவின் உயிர்ப்பு விழா வரையிலான இந்த 40 நாட்களும் நமது ஆன்மீக வாழ்வை மீளாய்வு செய்வதற்கும், நிதானித்துச் சிந்திப்பதற்கும் வருடாந்தம் நமக்குக் கிடைக்கும் அரியதோர் வாய்ப்பாகும். இது இறைவனோடும், தம்மோடும், அயலவரோடும் உள்ள உறவைச் சீர்படுத்துகின்ற உன்னதமான காலமாகும்.

செபம், தவம், தான தருமம் ஆகிய மூன்று செயற்பாடுகளும் இக்காலத்தின் முக்கிய தூண்களாக உள்ளன. செபத்தின் மூலம் இறைவனோடும், உண்ணா நோன்பு போன்ற தவ முயற்சிகள் மூலம் நம்மோடும், தான தருமங்கள் மூலம் அயலவரோடும் உறவை வலுப்படுத்த வேண்டும். தான தருமம் என்பது வெறும் காசு, பணம் கொடுப்பது மட்டுமல்ல நமது நேரம், அன்பு மற்றும் அக்கறையைப் பிறருக்குப் பகிர்ந்தளிப்பதே சிலுவையின் உண்மையான பங்களிப்பாகும்.

"கடவுளோடு ஒப்புரவாகுங்கள்" எனப் புனித பவுல் விடுத்த அழைப்பு இன்று நமக்கும் விடுக்கப்பட்டுள்ளது. "இதுவே தகுந்த காலம், இன்றே மீட்பு நாள்" என்பதை உணர்ந்து, எமது ஆன்மீக வாழ்வைப் புதுப்பிக்க இந்தத் தவக்காலத்தில்



நம்மை முழுமையாக ஒப்படைப்போம்."

– என்று மன்னார் ஆயர் தனது திருமடலில் அழைப்பு விடுத்துள்ளார்.

அரசாங்கம் மக்களின் அடிப்படை உரிமைகளை மதித்து, அடக்குமுறைச் சட்டங்களைத் தவிர்த்து நீதியான ஆட்சியை முன்னெடுக்க வேண்டும் என்ற அரசியல் செய்தியையும், தவக்காலத்தின் ஆன்மீக ஆழத்தையும் இணைத்து ஆயர் தனது செய்தியை நிறைவு செய்துள்ளார்.

# புத்தூரில் மாடுகள் கடத்தல்: சந்தேகநபர் ஒருவர் கைது!

யாழ். அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புத்தூர் பகுதியில் மாடுகளை சட்டவிரோதமாகக் கடத்திச் சென்ற நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கண்காணிப்புப் பணியில் ஈடுபட்ட காங்கேசன்துறை மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சந்தேகத்துக்கு இடமான வகையில் பயணித்த வாகனமொன்றை இடைமறித்துச் சோதனையிட்டபோதே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது என்றும், வாகனத்தில் இருந்த 9 மாடுகள் மீட்கப்பட்டன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளார்.

இதையடுத்து, அவருக்கு எதிராக மேலதிக விசாரணைகளை அச்சுவேலி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்



றத்தில் முற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

# யாழில் வீடு உடைத்துத் திருட்டு: சந்தேகநபர் ஒருவர் சிக்கினார்!

## மேலும் மூவருக்கு வலைவீச்சு



யாழ். அரியாலை – நெடுங்குளம் பகுதியில் வீடொன்று உடைக்கப்பட்டு பெருந்தொகை பணம் மற்றும் திருடப்பட்ட நிலையில், இந்தக் குற்றச்செயலுடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அரியாலை – நெடுங்குளம் பகுதியில் வீடொன்று கடந்த வாரம் உடைக்கப்பட்டு 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பணம் திருடப்பட்டிருந்தது. இது தொடர்பில் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமையவே சந்தேகநபர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும் மூவர் தலைமறைவாகியுள்ள நிலையில், அவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளன.




# 24 இலங்கைப் பிரதிநிதிகளுக்கு இந்திய வழங்கிய விசேட பயிற்சி

## சான்றிதழ்களுடன் சனியன்று நாடு திரும்பினர்

இந்தியாவில் நடைபெற்ற “நிறுவன வளர்ச்சி மற்றும் சிறப்புக்கான புதுமையான தலைமைத்துவம்“ என்ற தொனிப் பொருளிலான சர்வதேசப் பயிற்சி நெறியில் பங்கேற்ற 24 இலங்கைப் பிரதிநிதிகள், தமது பயிற்சிகளை நிறைவு செய்து நேற்றுமுன்தினம் நாடு திரும்பினர்.

இந்திய வெளியுறவு அமைச்சின் நிதியுதவி மற்றும் இந்திய அரசின் ஆதரவுடன், புதுடில்லியின் உத்தரப் பிரதேஷ் பகுதியில் அமைந்துள்ள தேசிய தொழில்முனைவோர் மற்றும் சிறு வணிக மேம்பாட்டு நிறுவனத்தில் இந்தப் பயிற்சி நடைபெற்றது.

கடந்த 22ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை நடைபெற்ற இப்பயிற்சி நெறியை, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் காரியாலயம் ஒருங்கிணைத்திருந்தது.

இலங்கையைச் சேர்ந்த 24 பிரதிநிதிகள் பங்கேற்ற இப்பயிற்சியில் பின்வரும் விடயங்கள் குறித்து சர்வதேச தரத்திலான கருத்தரங்குகளும் செய்முறைப் பயிற்சிகளும் வழங்கப்பட்டன:

* நிறுவன மேலாண்மை
* புதுமை வழிநடத்தல்
* திறன் மேம்பாடு
* சிறு வணிக வளர்ச்சி

பயிற்சியின் நிறைவில், தேசிய தொழில்முனைவோர் மற்றும் சிறு வணிக மேம்பாட்டு நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி பூனம் சிங்ஹாவால் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ்களும் நினைவுப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

இலங்கையர்களுக்காகத் தனித்துவமாக வடிவமைக்கப்பட்ட இப்பயிற்சியில், பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கட்சி பேதமின்றி இணைந்து பங்கேற்றிருந்தமை விசேட அம்சமாகும்.

இப்பயிற்சிக்குத் தேவையான வசதிகளைச் செய்துகொடுத்த இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவுக்கும், இந்திய அரசுக்கும் இலங்கை பிரதிநிதிகள் தமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சர்வதேசப் பயிற்சி, இலங்கையின் தொழில்முனைவுத் துறை மற்றும் நிறுவன ரீதியான திறன் மேம்பாட்டுக்கு ஒரு புதிய உத்வேகத்தை அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.





# பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராக திரட்டப்பட்ட 29 ஆயிரம் கையெழுத்துக்கள்

## சர்வதேச அமைப்புகளிடம் கையளிக்க நடவடிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக நீக்கக் கோரியும், அதற்குப் பதிலாக முன்மொழியப்பட்டுள்ள புதிய சட்டமூலத்தைக் கைவிடுமாறு வலியுறுத்தியும் வடக்கு - கிழக்கு சிவில் சமூக அமைப்புகளால் முன்னெடுக்கப்பட்ட கையெழுத்துப் போராட்டத்தில் 29 ஆயிரத்து 69 கையெழுத்துக்கள் திரட்டப்பட்டுள்ளன.

கடந்த மாதம் 14 ஆம் திகதி முதல் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய வகையில் சிவில் சமூக அமைப்புகளால் இக்கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அரசு கொண்டுவர எத்தனிக்கும் புதிய பயங்கரவாதத் தடைச் சட்டம், ஜனநாயக விழுமியங்களுக்கும் மக்களின் அடிப்படை உரிமைகளுக்கும் எதிரானது எனச் சுட்டிக்காட்டியே இந்த எதிர்ப்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

திரட்டப்பட்ட அனைத்துக் கையெழுத்துக்களும் தற்போது முறைப்படி தொகுக்கப்பட்டு, கொழும்பிலுள்ள நீதி அமைச்சுக்குத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மிகக் குறுகிய காலப்பகுதியில் இவ்வளவு பெரிய அளவிலான கையெழுத்துக்கள் திரட்டப்பட்டமை, இச்சட்டத்துக்கு எதிராக மக்களிடம் நிலவும் பலத்த எதிர்ப்பைப் பிரதிபலிக்கின்றது.

பிரதி செய்யப்பட்ட கையெழுத்துப் பிரதிகள் பின்வரும் சர்வதேச அமைப்புகள் மற்றும் நாடுகளிடம் கையளிக்கப்படவுள்ளன:

சர்வதேச அமைப்புகள்: ஐக்கிய நாடுகள் சபை, ஐரோப்பிய ஒன்றியம், சர்வதேச நாணய நிதியம்.

தூதரகங்கள்: இந்தியா, அமெரிக்கா, சுவிட்சர்லாந்து மற்றும் சீனா உள்ளிட்ட நாடுகளின் தூதரக அதிகாரிகளிடம் நேரில் கையளிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அரசு முன்மொழிந்துள்ள புதிய சட்டமூலமானது அரசையும் ஆட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கே அன்றி, மக்களின் பாதுகாப்புக்கானது அல்ல எனச் சிவில் சமூக அமைப்புகள் குற்றம் சாட்டியுள்ளன.

இப்போராட்டத்தின் மூலம் சர்வதேச சமூகத்தின் அழுத்தத்தை அரசுக்கு ஏற்படுத்த முடியும் எனப் போராட்ட ஏற்பாட்டாளர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

# ஓய்வுபெற்ற ஜேர்மன் விமானி நீர்கொழும்பில் மர்ம மரணம்!

## பிரேத பரிசோதனைக்கு நீதிவான் உத்தரவு

நீர்கொழும்பு, ஏத்துக்கால பகுதியில் உள்ள விடுதி ஒன்றின் அறையினுள் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்ட ஓய்வுபெற்ற ஜேர்மன் நாட்டு விமானியின் மரணம் தொடர்பில், பிரேத பரிசோதனை நடத்தி நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீர்கொழும்பு மேலதிக நீதிவான் ரகித அபேசிங்க பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

ஏத்துக்கால, புனித செபஸ்தியான் வீதியில் அமைந்துள்ள தனியார் விடுதிக்கு நேற்றுமுன்தினம் நேரில் சென்ற நீதிவான், அங்கு ஆரம்பகட்ட விசாரணைகளை முன்னெடுத்தார்.

அதனைத் தொடர்ந்து, சடலத்தை நீர்கொழும்பு பொது வைத்தியசாலையின் பிரதான சட்ட வைத்திய அதிகாரியிடம் ஒப்படைத்து பிரேத பரிசோதனை முன்னெடுக்குமாறு நீர்கொழும்பு தலைமையக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு அவர் பணிப்புரை விடுத்தார்.



இதன்போது சட்ட வைத்திய அதிகாரி ஐ.எம். திப்பட்டாவவும் சம்பவ இடத்தில் ஆய்வுகளை மேற்கொண்டார்.

இவ்வாறு உயிரிழந்தவர் பெலாடி அக்மட் ஜோகிம் (வயது 70) எனப்படும் ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த ஓய்வுபெற்ற விமானி என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் கடந்த சில வருடங்களாக இலங்கையில் வசித்து வந்துள்ளார்.

முன்னதாக இலங்கைப் பெண் ஒருவரைத் திருமணம் செய்திருந்த இவர், பின்னர் அவரிடமிருந்து சட்டரீதியாகப் பிரிந்து வாழ்ந்து வந்துள்ளார்.

இந்த மரணத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை எனத் தெரிவித்துள்ள பொலிஸார், நீர்கொழும்பு தலைமையக பொலிஸாரின் ஊடாக மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



# எரிபொருளைக் கொள்கலன்களில் சேகரிக்கத் தடை! போலிப் பிரசாரங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை!!

## பொலிஸார் கடும் எச்சரிக்கை



(க.மகாதேவன்)

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் பதற்றமான சூழலைத் தொடர்ந்து, பொதுமக்கள் எரிபொருளை முறையற்ற வகையில் சேமிப்பதைத் தவிர்க்கும் பொருட்டு புதிய கட்டுப்பாடுகளை இலங்கைப் பொலிஸார் விதித்துள்ளனர்.

இது குறித்து பொலிஸ் ஊடகப் பிரிவு விடுத்துள்ள விசேட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:-

நாட்டுக்குள் போதுமான அளவு எரிபொருள் கையிருப்பு உள்ளதாகப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உறுதிப்படுத்தியுள்ளது. எனவே, தட்டுப்பாடு ஏற்படும் என்ற தேவையற்ற அச்சத்தில் பொதுமக்கள் எரிபொருளை அதிகளவில் சேமிக்கத் தேவையில்லை என்று பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

சில தரப்பினர் திட்டமிட்ட முறையில் கலன்கள் மற்றும் போத்தல்களில் எரிபொருளைச் சேகரித்து வருவதைக் கட்டுப்படுத்தும் நோக்கில், மீள் அறிவித்தல் வரும் வரை பின்வரும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன:

மீன்பிடிப் படகுகள், தொழிற்சாலைகள், விவசாய நடவடிக்கைகள் மற்றும் அத்தியாவசிய வீட்டுத் தேவைகளுக்குத் தவிர, ஏனைய தேவைகளுக்காகக் கலன்கள் அல்லது கொள்கலன்களுக்கு எரிபொருள் வழங்குவது தடை செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர்களுடன் இணைந்து உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு அனைத்துப் பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எரிபொருளைச் சட்டவிரோதமாகக் களஞ்சியப்படுத்தி, அதிக விலைக்கு விற்பனை செய்யும் மோசடிகளில் ஈடுபடுவோருக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அதேவேளை, சமூக வலைத்தளங்கள் ஊடாக எரிபொருள் தட்டுப்பாடு குறித்துப் போலிப் பிரசாரங்களை முன்னெடுக்கும் நபர்கள் அல்லது குழுக்களைக் கண்டறியப் பொலிஸார் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பொதுமக்கள் வழமை போன்று தமது தேவைகளுக்காக மாத்திரம் எரிபொருளைப் பெற்றுக்கொள்ளுமாறும், தேவையற்ற பதற்றத்தை உருவாக்க வேண்டாம் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் வலியுறுத்தியுள்ளது.

# முனைக்காடு கிராமத்தில் யானை அட்டகாசம்: சிகிச்சை பெற்று வந்த முதியவரும் உயிரிழப்பு!

## பலி எண்ணிக்கை 2 ஆக உயர்வு

மட்டக்களப்பு மாவட்டத்தின் கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முனைக்காடு கிராமத்தில் காட்டு யானை தாக்கிப் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வந்த முதியவர், சிகிச்சை பலனின்றி நேற்று ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்துள்ளார்.

முனைக்காடு கிராமத்தைச் சேர்ந்த 74 வயதுடைய முதியவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை கிராமத்திற்குள் புகுந்த காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையிலேயே அவர் மரணமடைந்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை முனைக்காடு கிராமத்துக்குள் ஊடுருவிய காட்டு யானை, அங்கிருந்த பல வீடுகளைச் சேதப்படுத்தியதுடன் மக்களையும் கடுமையாகத் தாக்கியிருந்தது.

இந்தத் தாக்குதலின் போது சம்பவ இடத்திலேயே ஒரு முதியவர் உயிரிழந்தார். மேலும் இருவர் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இருவரில் ஒருவரே நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இதன் மூலம்



கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற காட்டு யானை தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை இரண்டாக அதிகரித்துள்ளது.

யானை தாக்குதலில் அடுத்தடுத்து இருவர் உயிரிழந்துள்ளமை முனைக்காடு கிராம மக்களிடையே பெரும் சோகத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது. வனவிலங்கு அதிகாரிகள் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினர் உடனடியாகத் தலையிட்டு, கிராமத்துக்குள் யானைகள் நுழைவதைத் தடுக்க நிரந்தரமான வேலி அல்லது பாதுகாப்புப் பொறிமுறைகளை உருவாக்க வேண்டும் எனப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாகக் கொக்கட்டிச்சோலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.





# இரண்டு நாடுகளுக்கும் இடையிலான ஆன்மீக உறவை வலுப்படுத்துவோம்!

## சுவாமி கைலாசநந்த் - ஜீவன் எம்.பி. சந்திப்பில் உறுதி

இலங்கைக்கு வருகை தந்துள்ள புகழ்பெற்ற ஆன்மீகப் பெரியார் சுவாமி கைலாசநந்த் கிரிஜி மகராஜ் தலைமையிலான ஸ்ரீபஞ்ச அக்னி அஹும் ஆஸ்ரமக் குழுவினரை, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் சந்தித்துக் கலந்துரையாடினார்.

தற்போது இலங்கையில் ஆன்மீகச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள சுவாமி கைலாசநந்த் கிரிஜி மகராஜ், இ.தொ.கா. பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமானை விசேடமாக அழைத்து இந்தக் கலந்துரையாடலை முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

இச்சந்திப்பின் போது, இலங்கையின் தற்போதைய ஆன்மீகச் சூழல், மலையக மக்களின் கலாசார விழுமியங்கள் மற்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான ஆன்மீகத் தொடர்புகளை வலுப்படுத்துவது குறித்துக் கருத்துக்கள் பரிமாறப்பட்டன. இதன் போது சுவாமி, ஜீவன் எம்.பிக்குத் தனது ஆசிகளை வழங்கினார்.

சர்வதேச அளவில் மதிக்கப்படும் ஸ்ரீபஞ்ச அக்னி அஹும் ஆஸ்ரமப் பிரதிநிதிகளின் இந்த விஜயம், இரு தரப்பு உறவுகளையும் ஆன்மீகப் பிணைப்பையும் மேலும் பலப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.









# மத்திய கிழக்கிலுள்ள இந்தியர்களை அழைத்து வருவது பற்றி ஆலோசனை

## பிரதமர் மோடி நடத்தினார்

அமெரிக்கா, இஸ்ரேலுடன் இணைந்து ஈரான்மீது தாக்குதல் நடத்தி வருகிறது. இதில் ஈரான் உச்சச் தலைவர் காமேனி கொல்லப்பட்டார்.

இதற்கு பதிலடியாக கத்தார், குவைத், பரைன் மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்தின் மீது ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால் மத்திய கிழக்கில் பதற்றம் நிலவி வருகிறது.

இந்த நிலையில், பாதுகாப்புக்கான அமைச்சரவைக் குழுவினருடன் பிரதமர் மோடி ஆலோசனை நடத்தினார். இந்த ஆலோசனையில் உள்துறை மந்திரி அமித்ஷா, பாதுகாப்பு துறை மந்திரி ராஜ்நாத் சிங், நிதி மந்திரி நிர்மலா சீதாராமன், வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

அப்போது, மத்திய கிழக்கில் உள்ள இந்தியர்களின் பாதுகாப்பு பற்றியும், தேவைப்பட்டால் அவர்களை சிறப்பு விமானங்களில் அழைத்து வருவது பற்றியும் விரிவான ஆலோசனை நடத்தப்பட்டது.

# ஈரான் உச்ச தலைவர் கொல்லப்பட்டமைக்கு பிரியங்கா காந்தி கண்டனம் தெரிவிப்பு!







ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேலுடன் இணைந்து தாக்குதல் நடத்தியது. இதில் ஈரான் உச்சச் தலைவர் அயதுல்லா அலி காமேனி கொல்லப்பட்டார். இதனால் ஈரான் வளைகுடாவில் உள்ள நாடுகள் மீதும், அமெரிக்காவின் இராணுவ தளங்கள் மீது கடுமையாக தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்த நிலையில் மக்களவை எம்.பி.பிரியங்கா காந்தி கண்டனம் தெரிவித்துள்ளார்.

தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது,

ஒரு இறையாண்மை கொண்ட நாட்டின் தலைமையை, ஜனநாயக உலகின் தலைவர்கள் என்று அழைக்கப்படுபவர்கள் குறிவைத்துத் படுகொலை செய்வதும், ஏராளமான அப்பாவி மக்களைக் கொல்வதும் வெறுக்கத்தக்கது.

அதற்கான காரணம் என்னவாக இருந்தாலும் அது கடுமையான கண்டனத்துக்கு உரியது.

பல நாடுகள் இப்போது மோதலில் இழுக்கப்பட்டிருப்பது துயரமானது. உலகத்துக்கு அமைதி தேவை. தேவையற்ற அதிகாமான போர் அல்ல. இதற்குப் பொறுப்பானவர்கள் மகாத்மா காந்தியின் வார்த்தைகளை நினைவில் கொள்வது நல்லது. கண்ணுக்குக் கண் என்பது உலகம் முழுவதையும் குருடாக்கும்.

பாதிக்கப்பட்ட நாடுகளில் உள்ள அனைத்துத் இந்திய குடிமக்களையும் பாதுகாப்பாக கொண்டுவர நமது பிரதமர் எல்லா முயற்சிகளையும் மேற்கொள்வார் என்று நம்புகிறேன்.- என்றுள்ளது.



# ஹார்முஸ் கடல் எல்லையில் சென்ற கப்பல்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்!

கப்பல்கள் செல்லும் முக்கிய வழிதடமாக அமைந்துள்ள வளைகுடா கடலில் ஹார்முஸ் கடல் எல்லையில் தற்போது வளைகுடா பகுதிகளில் 150 இற்கும் மேற்பட்ட எண்ணெய் மற்றும் கியாஸ், இதர சரக்கு கப்பல்கள் நங்கூரமிட்டு தரித்துள்ளன.

கடல் எல்லை வழியாகச் சென்றால் ஈரான் தாக்குவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளதால் அவ்விடத்திலேயே இருப்பதாக தெரியவருகின்றது.

மத்திய கிழக்கில் நிலவும் பதற்றங்களுக்கு மத்தியில், ஓமான் முசந்தம் கடற்கரையில் ஸ்கைலைட் என்ற எண்ணெய் தாங்கிக் கப்பல் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக அந்நாட்டின் கடல்சார் பாதுகாப்பு மையம் தெரிவித்துள்ளது.

ஓமான் கடல்சார் பாதுகாப்பு மையத்தின்படி, ஓமானின் முசந்தம் கடற்கரையிலிருந்து சுமார் ஐந்து கடல் மைல் தொலைவில் இந்த தாக்குதல் நடந்துள்ளது.

மேற்கு பசிபிக் பெருங்கடலில் உள்ள சிறிய தீவு நாடான பலாவு தேசியக் கொடி பறக்கவிடப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

பலாவ் மாநிலத்தின் கொடியின் கீழ் பயணித்த கப்பலில் இருந்த 20 பணியாளர்களும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டுள்ளனர். அவர்களில் நான்கு பேர் காயமடைந்துள்ளனர் என்று ஊடக அறிக்கை கூறுகின்றது.

இந்த தாக்குதல் தொடர்பான விவரங்கள் இன்னும் வெளியிடப்படவில்லை என்றாலும், ஓமானின் துக்ம் துறைமுகத்தை குறிவைத்து இரண்டு ட்ரோன் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகவும்அந்தநாட்டுஅரசுஊடகங்களால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வளைகுடா நாடுகள் மீது தெஹ்ரான் நடத்திய தொடர்ச்சியான பழிவாங்கும் தாக்குதல்களைத் தொடர்ந்து, ஓமானில் அல்லது அதற்கு அருகிலுள்ள இலக்குகள் தாக்கப்பட்ட முதல் சம்பவமாக இந்த சம்பவங்கள் குறிப்பிடுகின்றன.

ஓமானி கடற்படை மற்றும் இராணுவம் மீட்பு நடவடிக்கைகளை மேற்கொண்டதாக கடல்சார் பாதுகாப்பு மையம் மேலும் கூறியுள்ளது.

புதிய அணுசக்தி ஒப்பந்தத்தை எட்டுவதை நோக்கமாகக் கொண்ட ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான சமீபத்திய பேச்சுவார்த்தைகளில் ஓமன் ஒரு முக்கிய மத்தியஸ்தராக இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஈரானுக்கு எதிரான நடவடிக்கையில் மூன்று படையினரே கொல்லப்பட்டனர்

## அமெரிக்கா அறிவிப்பு



ஈரானுக்கு எதிரான நடவடிக்கையில் மூன்று படைவீரர்களே கொல்லப்பட்டனர் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஈரானுக்கு எதிரான நடவடிக்கையின் ஒரு பகுதியாக மூன்று படைவீரர்கள் கொல்லப்பட்டனர் என்றும் ஐந்து பேர் படுகாயமடைந்தனர் எனவும் அமெரிக்க இராணுவம் கூறியுள்ளது.


மேலும் பலர் சிறு சிறு காயங்கள் மற்றும் மூளை அதிர்ச்சிகளுக்கு ஆளானார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் மீண்டும் பணிக்குத் திரும்பும்ஆயத்தத்தில் ஈடுபட்டுள்ளனர் எனவும் அறிவித்துள்ளது.

அத்துடன், முக்கிய போர் நடவடிக்கைகள் தொடர்கின்றன, எங்கள் பதிலடி முயற்சி தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்றும் அமெரிக்க மத்திய கட்டளை ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

"நிலைமை சீரற்றதாக உள்ளது, எனவே குடும்பங்களுக்கு மரியாதை நிமித்தமாக, எங்கள் இறந்த வீரர்களின் அடையாளங்கள் உட்பட கூடுதல் தகவல்களை, அடுத்த உறவினர்களுக்கு அறிவிக்கப்பட்ட 24 மணி நேரம் வரை நாங்கள் மறைப்போம்," என்றும் கூறியுள்ளது.

இதற்கிடையில், அமெரிக்க துருப்புக்களில் மரணம் ஏற்பட்டுள்ளதாக வெளியாகும் முதல் மரணங்கள் இதுவாகும் என சர்வதேச தகவல்கள் தெரிவிக்கின்றன.



# ஈரான் ஆட்சியுடன் தொடர்புடைய இலக்குகளைக் குறிவைத்துத் தாக்குதல்

## இஸ்ரேலியப் பாதுகாப்புப் படை நடவடிக்கை

ஈரான் ஆட்சியுடன் தொடர்புடைய இலக்குகளைக் குறிவைத்து இஸ்ரேலிய பாதுகாப்புப் படைகள் டெஹ்ரான் நகரின் மீது ஒரு பாரிய தாக்குதல் அலையைத் தொடங்கியுள்ளன.

கடந்த ஒரு நாளில், வான்வெளி மேலாதிக்கத்தை நிலைநாட்டவும், டெஹ்ரான் நோக்கிய தாக்குதல் பாதையை வகுக்கவும் இஸ்ரேலிய விமானப்படை பெரிய அளவிலான வான்வழித் தாக்குதல்களை நடத்தியது என்று இஸ்ரேலிய இராணுவம் வெளியிட்டுள்ள உத்தியோகபூர்வ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரான் தலைநகரில் நேற்றுக் காலை முதல் சக்திவாய்ந்த வெடிச்சத்தங்கள் கேட்டன என்று ஈரான் ஊடகங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

றிப்பாக ஈரானிய அரசாங்கத்தின் முக்கிய மையங்கள் மற்றும் இராணுவ நிலைகளை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்று கூறப்படுகிறது.

ஈரானின் உச்ச தலைவர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையே நிலவி வரும் நேரடிப் போர் சூழல், இந்தத் தாக்குதல்களின் மூலம் உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது.

# இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவை பழிவாங்குவது சட்டபூர்வ உரிமை!

## ஈரானிய ஜனாதிபதி மசூத் பெஷேஷ்கியன் தெரிவிப்பு



இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவின் தாக்குதல்களுக்கு பழிவாங்குவதை ஈரான் தனது “சட்டபூர்வமான உரிமை மற்றும் கடமை” என்று கருதுவதாக ஈரானிய ஜனாதிபதி மசூத் பெஷேஷ்கியன் கூறியுள்ளார்.

ஈரானிய அரசு ஊடகங்களில் வெளியிடப்பட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

உச்ச தலைவர் அலி கமேனி “உலகின் மிகவும் மோசமான எதிராளிகளின் கைளால்” கொல்லப்பட்டார் என்று பெஷேஷ்கியன் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

இந்த வரலாற்று குற்றத்தைச் செய்தவர்கள் மற்றும் தளபதிகளுக்கு எதிராக இரத்தக்களரி மற்றும் பழிவாங்கலை ஈரான் இஸ்லாமிய குடியரசு அதன் கடமையாகவும் சட்டபூர்வமான உரிமையாகவும் கருதுகிறது.

இந்த பெரிய பொறுப்பையும் கடமையையும் அதன் முழு பலத்துடன் நிறைவேற்றும் என்று பெஷேஷ்கியன் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.



# தொடர்ந்து 7 வெற்றிகள்

ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் எந்தவொரு தோல்வியையும் சந்திக்காமல் ஏழாவது வெற்றியைப் பதிவு செய்தது தென்னாபிரிக்கா.

ரி-20 உலகக் கிண்ணத் தொடரின், சுப்பர்-8 சுற்றில் தென்னாபிரிக்கா தனது கடைசி 'லீக்'கில் நேற்று சிம்பாப்வே அணியை எதிர்கொண்டது.

டில்லியில் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே, 7 விக்கெட்டுகள் இழப்பிற்கு 153 ஓட்டங்களைச் சேர்த்தது. சிகந்தர் ரசா அதிகபட்சமாக 73 ஓட்டங்கள் அடித்தார்.

பின்னர் 154 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் தென்னாபிரிக்கா களம் இறங்கியது. மார்க்கிராம் 4 ஓட்டங்களிலும், டி கொக் 'டக்-அவுட்'டிலும் ஆட்டமிழந்தனர். அதன் பின்னர் வந்த ரியான் ரிக்கெல்டன் 22 பந்துகளில் 31 ஓட்டங்களும், டெவால்ட் பிரேவிஸ் 18 பந்துகளில் 42 ஓட்டங்களும் சேர்த்து அணிக்கு வலுச்சேர்த்தனர். மில்லர் 16 பந்துகளில் 22 ஓட்டங்கள் சேர்த்தார். டிரிஸ்டியன் ஸ்டப்ஸ் 24 பந்துகளில் 21 ஓட்டங்களும், ஜோர்ஜ் லிண்டே 21 பந்துகளில் 30 ஓட்டங்களும் சேர்த்து ஆட்டமிழக்காமல் இருக்க, தென்னாபிரிக்கா 17.5 ஓவர்களில் 5 விக்கெட்டுகள் இழப்பிற்கு 154 ஓட்டங்கள் சேர்த்து 5 விக்கெட்டுகளால் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் எந்தப் போட்டியிலும் தோல்வியடையாமல் 7ஆவது வெற்றியைப் பதிவு செய்து தென்னாபிரிக்கா அரையிறுதியில் விளையாட உள்ளது.

இந்த ஆட்டத்தின் நாயகனாக சிம்பாப்வேயின் சிகந்தர் ரசா தெரிவானார்.



**சிகந்தர் ரசா**

| ஓட்டங்கள் | பந்துகள் | சிக்ஸர்கள் | பௌண்டரிகள் |
|---|---|---|---|
| 73 | 43 | 04 | 08 |



| சஞ்சு சாம்சன் | | | |
|---|---|---|---|
| ஓட்டங்கள் | பந்துகள் | சிக்ஸர்கள் | பௌண்டரிகள் |
| 97 | 50 | 04 | 12 |

# கொல்கத்தாவில் சாம்சன் தாண்டவம்

## அரையிறுதிக்கு ரெடியானது இந்தியா

ரி-20 உலக் கிண்ணத் தொடரின் அரையிறுதிக்கு முன்னேறும் நான்காவது அணியைத் தீர்மானிக்கும் கடைசி லீக் ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகளை வீழ்த்தி இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியது.

இந்தியா– மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான சுப்பர் - 8 சுற்றின் கடைசிப் போட்டி கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நேற்று இரவு நடைபெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வென்ற இந்தியா பந்து வீச்சைத் தேர்வு செய்தது.

அதன்படி மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களமிறங்கியது.

ஷாய் ஹோப், ராஸ்டன் சேஸ் ஆகியோர் தொடக்க வீரர்களாகக் களமிறங்கினர். ஷாய் ஹோப் நிதானமாக விளையாட, சேஸ் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

இதனால் மேற்கிந்தியத் தீவுகள் 'பவர் பிளே'யில் விக்கெட் இழப்பின்றி 45 ஓட்டங்களைச் சேர்த்தது.

ஷாய் ஹோப் 33 பந்துகளில் 32 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மேற்கிந்தியத் தீவுகள் 14.1 ஓவர்களில் 4 விக்கெட்டுகள் இழப்பிற்கு 119 ஓட்டங்கள் சேர்த்திருந்தது.

5ஆவது விக்கெட்டுக்காக ரோவன் பொவேலுடன் ஜேசன் ஹோல்டர் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி அதிரடியாக விளையாடியது. அடுத்து வந்த ஹெட்மையர் 1 27 ஓட்டங்கள் விளாசினார். சேஸ் 40 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழந்தார்.

இறுதியில் 20 ஓவர்களில் 4 விக்கெட்டுகள் இழப்பிற்கு 195 ஓட்டங்களைச் சேர்த்தது.

பொவேல் 19 பந்துகளில் 34 ஓட்டங்களும், ஹோல்டர் 22 பந்துகளில் 37 ஓட்டங்களும் சேர்த்து ஆட்டமிழக்காமல் இருந்தனர். இந்த ஜோடி 35 பந்துகளில் 76 ஓட்டங்கள் குவித்தது.

இந்தியப் பந்துவீச்சில் பூம்ரா 2 விக்கெட்டுகளையும், பாண்டியா, வருண் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பின்னர் 196 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்தியா விளையாடியது.

அபிஷேக் சர்மா, சஞ்சு சாம்சன் ஆகியோர் தொடக்க வீரர்களாகக் களமிறங்கினர். அபிஷேக் சர்மா 10 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழந்தார். அடுத்து வந்த இஷான் கிஷானும் 10 ஓட்டங்கள் சேர்த்து வெளியேறினார். இதனால், 41 ஓட்டங்கள் சேர்ப்பதற்குள் 2 விக்கெட்டுகளை இழந்தது.

3ஆவது விக்கெட்டுக்காக சஞ்சு சாம்சனுடன் சூர்யகுமார் யாதவ் ஜோடி சேர்ந்தார். சஞ்சு சாம்சன் தொடக்கம் முதலே அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்தார்.

அவர் 26 பந்துகளில் 6 பௌண்டரிகள், 3 சிக்ஸர்களுடன் அரைச்சதம் அடித்தார்.

சூர்யகுமார் யாதவ் 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

4ஆவது விக்கெட்டுக்காக சஞ்சு சாம்சனுடன் திலக் வர்மா ஜோடி சேர்ந்தார். திலக் வர்மா 27 ஓட்டங்களுடனும் பின்னர் வந்த ஹர்திக் பாண்டியா 17 ஓட்டங்களுடனம் ஆட்டமிழந்தனர். பின்னர் இறங்கிய ஷிவம் துபே அதிரடியாக ஆடினார்.

இந்தியாவுக்கு கடைசி 10 பந்துகளில் 17 ஓட்டங்கள் தேவைப்பட்டன. அதில், ஷிவம் துபே 10 ஓட்டங்களை அடிக்க, கடைசி ஓவரில் 7 ஓட்டங்கள் தேவைப்பட்டன.

அந்த ஓவரை எதிர்கொண்ட சஞ்சு சாம்சன். அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றார். இதனால் இந்தியா 19.2 ஓவர்களில் 5 விக்கெட்டுகள் இழப்பிற்கு 199 ஓட்டங்கள் சேர்த்து 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

சஞ்சு சாம்சன் 97 ஓட்டங்களுடனும் துபே 8 ஓட்டங்களுடனும் களத்தில் நின்றனர்.

ஆட்டநாயகனாக சஞ்சு சாம்சன் தெரிவானார்.

இந்தப் போட்டியில் வெற்றிபெற்றதன் மூலம் இந்திய அணி அரையிறுதிக்கான வாய்ப்பைப் பெற்றது. அரையிறுதியில் இங்கிலாந்தை எதிர்கொள்ளவுள்ளது.

### ரி-20 உலகக் கிண்ணம்: 'சுப்பர்-8'

#### குழு 01 - புள்ளிப்பட்டியல்

| அணிகள் | போ | வெ | தோ | ச | மு.அ. | பு | ஓ.ச. |
|---|---|---|---|---|---|---|---|
| தெ.ஆ. | 3 | 3 | 0 | 0 | 0 | 6 | 2.259 |
| இந்தியா | 3 | 2 | 1 | 0 | 0 | 4 | 0.106 |
| மே.இ.தீ. | 3 | 1 | 2 | 0 | 0 | 2 | 0.993 |
| சிம்பாப்வே. | 3 | 0 | 3 | 0 | 0 | 0 | -3.415 |

# இன்றைய ராசி பலன்கள் - 02.03.2025




இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கு சாதகமான நாள். இதன் மூலம் திருப்தி உண்டாகும். வெற்றி காண எளிய அணுகுமுறை மேற்கொள்ளுங்கள்.

உங்கள் பணியில் நீங்கள் திறமையாக செயல்படுவீர்கள்.இதனால் திருப்தி கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

உங்கள் நண்பர் இல்ல விழாவில் பங்கு கொள்ள பயணம் மேற்கொள்ளும் போது உங்கள் துணையுடன் அமைதியான தருணங்களை கழிப்பீர்கள்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். கணிசமான தொகை காண அதிர்ஷ்டம் சாதகமாக இருக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் நம்பிக்கை காரணமாக நீங்கள் சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




இன்று பயணம் காணப்படுகின்றது. இது புதியதொடர்புகள் கிடைக்க பயனுள்ள வாய்ப்பை உருவாக்கித் தரும்.

பணியிடத்தில் நன்மையான பலன்கள் கிடைக்கும். உங்கள் கடின உழைப்பிற்கு பாராட்டைப் பெறுவீர்கள்.

பயணத்தின்போது உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை கொண்டாடி மகிழ்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமாக இருக்கும். என்றாலும் குடும்பத்திற்காக சிறிது பணம் செலவு செய்ய நேரும்.

ஆரோக்கியமான உணவு உட்கொள்வதன் மூலம் திடமாக இருக்கலாம். அசௌகரியத்தை சமாளிக்கலாம்.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். குறைந்த முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். சிறந்த செயல்திறம் மூலம் உங்கள் திறமைகளை நிரூபிப்பீர்கள். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

பணி சம்பந்தமான புதிய வாய்ப்புகள் உருவாகலாம். அந்த வாய்ப்புகளை பயன்படுத்துவதன் மூலம் பணியில் முன்னேற்றம் காணலாம்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் குடும்ப வளர்ச்சி மற்றும் குடும்பத்தில் நடைபெறும் சுப நிகழ்ச்சி குறித்து ஆலோசிப்பீர்கள்.

பணவரவு மகிழ்சிகரமாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு உயரும். அது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.




இன்று முன்னேற்றகரமான பலன்களைக் காண்பீர்கள்.இன்று புத்துணர்ச்சியுடனும் உறுதியுடனும் காணப்படுவீர்கள். புதிய முயற்சிகளில் பங்கு கொள்வது உங்களுக்கு லாபகரமாக அளிக்கும்.

உங்கள் திறமை காரணமாக பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். முறையாக திட்டமிடுவதன் மூலம் உங்கள் பணிகளை உற்சாகமாக செய்வீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான உறவுமுறை கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையிடம் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று போதிய பணம் காணப்படும். இன்று கணிசமான தொகை சேமிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று துடிப்பான நாளாக இருக்காது. ஆன்மீக பயணங்கள் உங்களுக்கு நல்ல பலனை அளிக்கும். பயணங்கள் மூலம் பலனுள்ள மாற்றங்கள் ஏற்படும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். இதனால் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பது கடினம்.

குடும்ப பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும். உங்கள் உறவின் சிக்கல்களை தீர்க்க உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச வேண்டும். இதன் மூலம் உறவில் நல்லிணக்கம் தக்க வைத்துக் கொள்ள முடியும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். தேவையற்ற செலவுகள் கவலையை உண்டாக்கும்.

உங்கள் துணையின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. இதற்காக நீங்கள் செலவு செய்ய வேண்டியிருக்கும்.




பொறுமையான அணுகுமுறையை பராமரிப்பதன் மூலம் நீங்கள் சாதகமான பலன்களை காணலாம். சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க நேரலாம். வெற்றி காண முறையாக திட்டமிட வேண்டும்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது தவறுகள் நேர வாய்ப்புள்ளது. பனியின் போது நீங்கள் விழிப்புடன் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் இருவருக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்படும்.சமநிலை அணுகுமுறை மேற்கொண்டு நல்ல புரிந்துணர்வை பராமரியுங்கள்.

அதிகரிக்கும் செலவுகள் கவலையை உண்டாக்கும். பணத்தை விவேகத்துடன் கையாள்வதன் மூலம் நிலைமையை சிறப்பாக சமாளிக்கலாம்.




இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள். அவற்றின் மூலம் லாபகரமான பலன் கிடைக்கும். நீங்கள் இன்று நம்பிக்கை உணர்வுடன் காணப்படுவீர்கள்.

பணியில் உங்கள் செயல்திறன் அபாரமாக இருக்கும். உங்கள் பணிக்கு மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். இதனால் திருப்தியும் சாதித்த உணர்வும் உங்களிடம் காணப்படும்.

உங்கள் வீட்டில் நடக்கும் சுப நிகழ்ச்சி ஒன்றைப் பற்றி உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுவீர்கள். உங்கள் துணையுடன் கொண்டாடி மகிழ்வீர்கள்.

பணப்புழக்கம் அதிகமாகக் காணப்படும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது.




இன்று காணப்படும் குழப்பமான சூழ்நிலை உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும். அத்தகைய சூழ்நிலையை கையாள்வது கடினம். பிரார்த்தனை மூலம் ஆறுதல் பெறலாம்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். நீங்கள் பணியில் தவறுகள் செய்ய நேரலாம். உங்கள் பணிகளை திறம்பட செய்ய முறையாக திட்டமிட வேண்டும்.

உங்களின் உணர்ச்சி வசப்பட்ட மனநிலையை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். எதையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் நன்மை விளையும்.

நிதி நிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது.பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளதால் கவனமாக இருக்க வேண்டும்.

நீங்கள் தலைவலி மற்றும் சளித் தொல்லையால் அவதிப்பட நேரலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 02.03.2025




இன்று நீங்கள் பதட்டமான மன நிலையில் இருப்பீர்கள். இசை கேட்ப தன் மூலம் ஆறுதல் கிடைக்கும். விவாதம் செய்வதை தவிர்த்து நட்பான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள்.

கவனக்குறைவு காரணமாக பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.உங்கள் பணிகளை சிறப்பாக செய்ய கவனமாக இருப்பது உதவியாக இருக்கும்.

உறவில் ஸ்திரத்தன்மை தக்க வைக்க உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. கூடுதல் செலவுகள் உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

தூக்கமின்மை காரணமாக கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. பிரார்த்தனை மற்றும் தியானத்தில் ஈடுபடுவதன் மூலம் ஆரோக்கியமாக இருக்கலாம்.




உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும். என்றாலும் உறுதி மற்றும் சளைக்காத குணம் மூலம் வெற்றி காண்பீர்கள்.

எதிர்மறை விளைவுகள் மற்றும் எதிர்மறை எண்ணங்கள் சிறப்பாக பணியாற்ற தடையாக இருக்கும். சில கட்டுப்பாடுகள் சிறந்த பலன் காண தடையாக இருக்கும்.

கவனமற்ற பேச்சு காரணமாக உங்கள் துணை யுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும்.உறவில் நல்லிணக்கம் காண நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

வரவும் செலவும் கலந்து காணப்படும். உங்கள் சேமிப்பை உயர்த்துவது கடினமாக உணர்வீர்கள்.

பாதுகாப்பின்மை உணர்வு காரணமாக நரம்பு பிரச்சினை ஏற்படலாம். அமைதியாக இருந்து பிரார்த்தனை மேற்கொள்ளவும்.




இன்று நீங்கள் நம்பிக்கை உணர்வு மிகுந்து காணப்படுவீர்கள். உங்களிடம் ஸ்திரத்தன்மை காணப்படும். உங்களின் மாறுபாடற்ற மனநிலை காரணமாக நீங்கள் திறமையான முடிவுகளை எடுப்பீர்கள்.

உங்கள் பணிகளை எளிதாக மேற்கொள்ளவும் அதனை குறித்தநேரத்தில் முடிக்கவும் பணியிடச் சூழல் உகந்ததாக இருக்கும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெற்று மகிழ்வீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பான உணர்வை பகிர்ந்து கொள்வீர்கள். இதன் மூலம் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.

ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் காணப்படாது. உங்களின் மகிழ்ச்சியான மனநிலை உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று கட்டுப்பாடற்ற சூழ்நிலை காணப்படும். மந்தமான தருணங்கள் காணப்படும். எனவே இருப்பதைக் கொண்டு மகிழ வேண்டும். எதிர்காலத் திற்காக செயல்பட முயல வேண்டும்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. முறையாக திட்டமிடுவதன் மூலம் சிறப்பாக செயல்பட இயலும்.

திரைப்படம் பார்த்தல் மற்றும் வெளியிடங்களுக்கு செல்லுதல் போன்ற நிகழ்சிகள் மூலம் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று பண இழப்பு காணப்படும். பயணத்தின்போது பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

பதற்றம் காரணமாக கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. யோகா பயிற்சியின் மூலம் ஆறுதல் பெறலாம்.



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா,
மேனாள் தமிழ்மொழிக் கல்வி
இயக்குநர்,
மெல்பேர்ன், ஆஸ்திரேலியா.

# மாசி மகத்தை மனதில் நினைப்போம்!

## இன்று மாசி மகம்

நதி நீராடுதல் நலனே நல்கும்
அதனை முன்னோர் அவசிய மாக்கினார்
ஒவ்வொரு தினமும் உன்னத மென்று
உள்ள மெண்ணி இணைத்தார் வாழ்வில்

உள்ளத் தூய்மை உடலிற் றூய்மை
தெள்ளத் தெளிவுடன் தேர்ந்தார் முன்னோர்
நீரால் உடலில் தூய்மை நிறையும்
நேர்மையால் உளத்தில் தூய்மை நிலைக்கும்

உடலில் தூய்மை உளத்தில் தூய்மை
தருவதே சமயத்தின் நோக்கே ஆகும்
இரண்டுந் தூய்மை எய்திடும் நிலையில்
இறையின் நினைப்பு இதயத்தி லமரும்

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மாதமும்
ஒவ்வொரு பொழுதும் உன்னத மாகும்

உன்னதக் கருவை உட்கரு வாக்கி
உயர்பரம் பொருளை உணர்ந்திடச் செய்தார்

இறையினைத் தேடி ஓடவே வேண்டாம்
இயற்கையை இறையாய் இருப்பதே தத்துவம்
நீரும் இயற்கை நெருப்பும் இயற்கை
இரண்டு மாகி இருக்கிறான் இறைவன்

இருளிலு மிருப்பான் ஒளியிலு மிருப்பான்
இறுதியும் தொடக்கமும் இல்லான் இறைவன்
இறைவனைக் கண்டிட ஏங்கியே நிற்கிறோம்
ஏக்கத்தைப் போக்கிட வழிகளைத் தேர்கிறோம்

திருநாள் பெருநாள் தேடிடும் மார்க்கமாய்
பக்குவம் பேணிக் கைக்கொண்டு வருகிறோம்

மாசியில் மகமாய் வருகின்ற திருநாள்
மாண்புடை மகத்துவம் கொண்ட நன்னாளே

சைவம் வைணவம் இணையும் வகையில்
மாசி மகமும் ஆகியே இருக்கு
சிவனும் இருப்பார் முருகனும் இருப்பார்
திருமால் இருப்பார் சிவசக்தியும் இருப்பார்

இட்ட பெயர்கள் பற்பல வாகினும்
எல்லாம் இறையே எல்லாம் உயர்வே
உயர்வாம் இறையை மனமதில் எண்ணி
நதிநீராடல் மாசி மகத்தின் மகத்துவமாகும்

மகத்துட னிணையும் மாசிப் பௌர்ணமி
மகத்துவம் மிக்கது என்பது தத்துவம்
புனித நீராடுதல் மகத்துவம் என்பதால்
மாசி மகத்துடன் இணைத்ததை வியப்போம் !